# பாலர் வகுப்புகளில் பரந்த பரிசோதனை

## பிள்ளைகள் சுயமாகவே வாரத்தில் இரண்டு தடவை பரிசோதனை செய்துகொள்ளலாம். இந்தப் பரிசோதனைகள் இலவசமானவை.

பிள்ளைகளை வாரம்தோறும் செவ்வாய்கிழமை அத்தோடு வெள்ளிக்கிழமைகளில் வீட்டில் பரிசோதனை செய்யுங்கள்.

சுயமாக செய்யும் பரிசோதனைகள் பாடசாலையில் இருந்து உங்களுக்கு கிடைக்கப்பெறும். உங்களுக்கு பரிசோதனை தேவை என்பதை நீங்கள் பாடசாலைக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

உங்களது உதவியுடன் பிள்ளைகள் தாமாகவே தம்மை பரிசோதனை செய்யலாம். அந்த பொதியினுள் பாவிப்பு கையேடு உண்டு.

கடந்த 12 மாதங்களுக்குள் கொரோணா தொற்றை பெற்றவர்கள் இந்த பரிசோதனையை எடுக்கத் தேவை இல்லை.

**பரிசோதனை தொற்று உள்ளது என காட்டினால்?**
பிள்ளை வீட்டில் தங்க வேண்டும் அத்தோடு ஏனையவருடன் 2 மீட்டர் இடைவெளியை கொண்டிருக்க வேண்டும்.

பிள்ளை ஓர் பரிசோதனை தலத்தில் ஓர் புதிய பரிசோதனையை எடுக்க வேண்டும். இதற்கு நீங்கள்

1. பரிசோதனைக்கான நேரத்தை இணைய தளத்தின் ஊடாக ஒதுக்கிக்கொள்ளலாம்
2. ஒஸ்லோவில் உள்ள நகர சபையின் பரிசோதனை கூடங்களை நேரம் ஒதுக்காமல் உபயோகிக்கலாம்.
3. 21 80 21 82 என்ற கொரோணா தொலைபேசியை அழைக்கலாம்

**பரிசோதனை தொற்று இல்லை என காட்டினால்?**
வளமை போல பிள்ளை பாடசாலைக்கு செல்லலாம்.

**இந்த பரிசோதனை தன்னார்வமானது**
பரிசோதனையை எடுத்துக்கொள்வது தன்னார்வமானது, பிள்ளையை சோதிப்பதா இல்லையா என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள்.